**கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),**

**திருவாரூர்.**

முன்னிலை : திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L.,
நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் நாள் செவ்வாய்கிழமை

DVC. No. 34/2025
CNR.No: TNTV13-000292-2025

கவிவாணி ... மனுதாரர்

/எதிரிடை/

அரவிந்த் ... எதிர்மனுதாரர்

இவ்வழக்கு கடந்த 19.08.2025-ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 22.08.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் திருமதி. ஏ. பிரேமலதா, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும் சாட்சிகள், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு .....

**1. <u>மனுவின் சுருக்கம்</u> :-**

**1.1.** இம்மனுவானது பாதுகாப்பு அலுவலர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும், கடந்த 29.08.2022 ல் திருமணமானதாகவும், ஆனால், 3 மாதங்கள் மட்டுமே தன் கணவரோடு வாழ்ந்ததாகவும், 45 நாட்கள் கன்சீவ் ஆகி இருந்த நிலையில், கருகுழாயில் கரு தங்கியதால் ஆப்பரேஷன் செய்யப்பட்டு விட்டதாகவும், பின்பு ஓராண்டு தாய் வீட்டிலேயே மனுதாரர் தங்கியிருந்தும், கணவர் வந்து அழைக்க வரவில்லை எனவும், போன் செய்தாலும் பேசுவதில்லை எனவும் கூறியுள்ளார். திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டு அதனடிப்படையில் ஒரு மாதம் கழித்து வந்து கணவர் தன்னை அழைத்து சென்றதாகவும், தந்தையுடன் சென்ற மனுதாரரை தந்தையின் கண் முன்னயே மனுதாரரை அடித்ததாகவும், பின்பு மயிலாடுதுறை மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு அதனடிப்படையில் 2 மாதம் கழித்து மீண்டும் அழைத்து சென்றதாகவும், பின்பு சண்டையிடுவதும், அடிப்பதாகவும் மனுதாரரிடம் அவரது கணவர் நடந்து கொண்டதாகவும், மனுதாரரின் பெற்றோர்களிடம் பணம் கேட்டு வாங்கி வரும்படியும், ஐந்து ஆண்டுகளுக்கு குழந்தை பெறக்கூடாது எனவும், மனுதாரருக்கு அவரது கணவர் கட்டளையிட்டதாகவும், மாமியார் வீட்டில் 5 மாதம் காலம் தங்கியிருந்ததாகவும், அங்கு ஒரு மளிகை கடை வைத்து கடையை சுற்றி கேமரா கண்காணிப்பில் வேலை பார்க்க சொன்னதாகவும், மனுதாரரின் பிறந்தநாளன்று அவரது தந்தையும், தங்கையும் மனுதாரை

காண வந்தபோது மனுதாரரின் மாமியார் இது என் கடை என்றும், கடையை விட்டு வெளியே போ என்றும், வீட்டையும் விட்டு வெளியே சென்றுவிடு என துரத்தியதாகவும், மனுதாரரின் கணவருக்கு வேறு திருமணம் செய்து வைக்கப் போவதாகவும், அதனால் மனுதாரர் டைவர்ஸ் தரும்படியும் மிரட்டியதாக கூறியுள்ளார்.

**1.2.** மாமியார் கடையை பூட்டிவிட்டு சென்றதால் வீதியில் மனுதாரர் தங்கியதாகவும், கணவருக்கு போன் செய்தபோது அப்படியே உன் வீட்டிற்கு போய்விடு என்று சொல்லியதாகவும், காலையில் மனுதாரரின் கணவரிடம் மனுதாரர் கேட்டபோது வீட்டில் இருந்த பொருட்களை அடித்து நொருக்கி, மனுதாரரின் தங்கையை தகாத வார்த்தைகளால் திட்டியும், மனுதாரரின் தந்தையை மாமியாரும், திட்டியதாகவும், பின்பு மனுதாரர் அவரது தாய் வீட்டிற்கு வந்ததாகவும் கூறியுள்ளார். தாய் வீட்டிற்கு வந்து 11 மாதங்கள் ஆகிய நிலையில், கணவருக்கு போன் செய்தால் பதில் இல்லாமலும், மாமியார் போன் செய்து விவாகரத்து தர கோரியதாகவும், மனுதாரரின் கணவருக்கு வேறு திருமணம் செய்வதாக கூறிவிட்டதால் மனுதாரர் டைவர்ஸ் தருவதாக முடிவு எடுத்துள்ளதாகவும், எனவே, தன்னுடைய திருமண நகை, தொகை, சீதன பொருட்கள் ஆகியவற்றை திருப்பி தரவும், இழப்பீட்டு தொகை கோரியும், ஜீவனாம்ச பரிகாரம் கோரியும், பாதுகாப்பு அலுவலர் மூலம் விண்ணப்பித்துள்ளார்.

**2. <u>சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>:**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியிடு செய்யப்பட்டுள்ளது.

**3. <u>தீர்விற்குரிய பிரச்சனை யாதெனில் :-</u>**

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 18, 19, 20 மற்றும் 22 ஆகிய பிரிவுகளின் கீழ் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா ?

**4. <u>தீர்வு</u> :**

**4.1.** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**4.2.** குடும்ப வன்முறை சட்டம் பிரிவு 12 ன் கீழ் மனுதாரர் பிரிவு 18, 19, 20 மற்றும் 22 ன் கீழ் பரிகாரங்கள் கோரி பாதுகாப்பு அலுவலர் மூலம் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது மனுதாரரின் கணவருக்கு எதிராக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கில் எதிர்மனுதாரர் போதிய கால அவகாசம் வழங்கியும், எதிருரை தாக்கல் செய்யாததாலும், ஆஜராகாத காரணத்தாலும் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு அலுவலர் மூலம் குடும்ப நிகழ்வு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.3.** இம்மனு விசாரணையில் ம.சா.1 ஆக மனுதாரர் விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பில் ம.சா.1 விசாரணையின்போது, ம.சா.ஆ.1 ஆவணமான கடந்த 29.08.2022 அன்று எதிர்மனுதாரருடன் தனக்கு நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழும், ம.சா.ஆ.3 ஆவணமான திருமண பதிவு சான்று நகல் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலித்த வகையில், எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் இடையே கடந்த 29.08.2022 அன்று திருமணம் நடந்துள்ளது என்பதும், மேற்படி திருமணமானது திருவாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 23.12.2022 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் அறிய முடிகிறது. இந்த வகையில், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கணவன் - மனைவி உறவு இருந்து வருகிறது என்பது அறிய முடிகிறது. மேலும் பாதுகாப்பு அலுவலர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள குடும்ப நிகழ்வு அறிக்கையில் பாதுகாப்பு அலுவலரால் உறவுமுறை குறித்து உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் தரப்பினர்களுக்கிடையே குடும்ப உறவுமுறை (Domestic relationship) உள்ள காரணத்தால் இம்மனு நிலைநிற்கத்தக்கதாகும்.

**4.4** குடும்ப வன்முறைக்கான காரணங்களாக மனுதாரர் தரப்பில் விசாரணையின்போது நிரூபண வாக்குமூலம் மூலம் பின்வரும் காரணங்கள் கூறப்பட்டுள்ளது :

1) மனுதாரருடன் அவரது கணவர் அடிக்கடி சண்டையிடுவதும், அடிப்பதுமாக இருந்தார் ;

2) 5 ஆண்டுகளுக்கு குழந்தை பெறக்கூடாது என்று கணவர் கட்டளையிட்டார் ;

3) பெற்றோர் முன்னிலையில் மனுதாரரை அடித்து துன்புறுத்தினார் ;

4) வேறு திருமணம் செய்து கொள்வதாக கூறி மனுதாரரை கைவிட்டு விட்டார் ;

5) மனுதாரரின் பெற்றோரிடமிருந்து பணம் கேட்டு வாங்கி வரும்படி கேட்டு அடித்துள்ளார்.

**4.5.** மேற்படி காரணங்களுக்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டு பரிகாரமாக மனுதாரருக்கு மாத ஜீவனாம்சமாக ரூ.20,000/- மும், மனுதாரரின் திருமண நகைகளான 17 ¼ பவுன் நகைகளையும், ரூ3 லட்சம் மதிப்புள்ள சீதன பொருட்களையும் திருப்பி தரக்கோரியும், இழப்பீடாக ரூ.20 லட்சம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.6.** பாதுகாப்பு அலுவலர் மூலம் தாக்கல் செய்த குடும்ப நிகழ்வு அறிக்கையை பரிசீலிக்கையில், மனுதாரரின் கணவர் கடந்த 08.05.2024 ம் தேதி இரவு 12.30 மணிக்கு மனுதாரரை தகாத வார்த்தைகளால் திட்டி, சண்டையிட்டு, கையால் கழுத்து, முதுகு வரை அடித்து துன்புறுத்தியதாகவும், சுமார் 2 ½ ஆண்டுகளாக மனுதாரருடன் அவரது கணவர் தாம்பத்திய ஈடுபாடு இல்லாமல் இருந்து வந்துள்ளதாகவும், 6 மாத காலமாக மனுதாரருடன் அவரது கணவர் பேசாமல் இருந்து வந்துள்ளதாகவும், உடல்ரீதியான வன்முறையாக கூறப்பட்டுள்ளது. மேலும், கணவர் வாய்மொழியாக மற்றும் உணர்ச்சிவயப்பட்டு திட்டுதல் என்ற வன்முறையின் வகையின் கீழ் குழந்தை பெறுவது குறித்தும், வேலைக்கு செல்வதை தடுத்தும்,

மனுதாரர் வெளியே செல்வதை தடுத்தது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார வன்முறையாக கடந்த ஒரு வருட காலமாக மனுதாரரின் கணவர் மனுதாரருக்கு எவ்வித பொருளாதார உதவிகளும் செய்து வரவில்லை என்றும், மனுதாரரின் 17 ½ மதிப்புள்ள நகைகள், ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீதன பொருட்கள் மனுதாரரின் கணவர் வசம் இருந்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4.7.** மேற்படி உடல் ரீதியான, வாய்மொழியாக மற்றும் உணர்ச்சி வயப்பட்டு திட்டுதல், பொருளாதார வன்முறை ஆகிய காரணங்கள் குடும்ப வன்முறை சட்டம் பிரிவு 3 வரைமுறைக்குள் குடும்ப வன்முறைக்கான ஏற்புடைய காரணங்களாகும்.

**4.8.** எதிர்மனுதாரர் தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், எதிருரை தாக்கல் செய்யாமலும், ஆஜராகாத காரணத்தாலும் தோன்றாத்தரப்பினராக உள்ள நிலையில் மனுதாரர் முன்வைத்துள்ள காரணங்கள் ஏற்புடைய காரணங்களாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**4.9.** கணவன் என்ற முறையில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கடந்த ஓர் ஆண்டிற்கு மேலாக எவ்வித பொருளாதார உதவியும் செய்து வரவில்லை என்ற நிலையில், அதனை மறுதளிக்க எதிர்மனுதாரர் முன்னிலையாகாதபோது மனுதாரர் பொருளாதார ரீதியான குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற வகையில் மனுதாரருக்கு ஜீவனாம்ச கட்டளை கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**4.10.** மேலும், சீதன பொருட்கள் தொடர்பாக மனுதாரர் தரப்பில் கடந்த 12.03.2026 ம் தேதியில் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி

ஆணையுறுதி ஆவணத்தில் மனுதாரர் தனது திருமண நகை பட்டியல் குறித்தும், சீர்வரிசை சாமான்கள் குறித்தும் பட்டியலிட்டுள்ளார். நகை பட்டியலில் 17 ¼ பவுனுக்குரிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சீதன பொருட்கள் குறித்த பட்டியலில் வீட்டிற்கு தேவையான அனைத்து எலக்ட்ரிக் பொருட்களும், பித்தனை மற்றும் சில்வர் பாத்திரங்களும் அடங்கும் என பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது. சீதன பொருட்கள் குறித்து விரிவான பட்டியல் இல்லாததால் அதனை பொறுத்த முழுமையான பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**4.11.** மனுதாரர் தன் பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார் என்ற நிலையில், மனுதாரரின் பாதுகாப்பு மற்றும் தேவைகள் கருதி மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிலேயே வசித்து வருவதே ஏற்புடையது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**4.12.** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொறுப்புடைமை தொடர்பான சிறப்பு ஆணையுறுதி ஆவணத்தை பரிசீலித்த வகையில், எதிர்மனுதாரர் ஆவின் பால் வேன் டிரைவராக மாதம் ரூ.20,000/- வருமானம் ஈட்டி வருவதாகவும், மனுதாரருக்கு பொதுவான மாத செலவினமாக ரூ.20,000/- தேவைப்படுவதாகவும், மனுதாரர் தனக்கு வருமானம் ஏதும் இல்லாமல் இருந்து வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பொறுப்புடைமை ஆவணம், குடும்ப நிகழ்வு அறிக்கை, மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டு இம்மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

1) **பாதுகாப்பு உத்தரவு** : மனுதாரர் பாதுகாப்புடனும், நிம்மதியுடனும் வசித்து வர எதிர்மனுதாரர் எவ்விதத்திலும் இடையூறோ, தொந்தரவோ செய்யக்கூடாது என பிரிவு 18 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

2) **ஜீவனாம்ச உத்தரவு** : மனுதாரரின் அடிப்படை தேவைகளான மருத்துவ, உணவு மற்றும் உடை செலவினங்களுக்கு, எதிர்மனுதாரர் பிரதி மாதம் தோறும் 5ம் தேதிக்குள் ஜீவனாம்சமாக ரூ.10,000/- இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்க உத்தரவிடப்படுகிறது.

3) **சீர்வரிசை திரும்ப கோரும் உத்தரவு** : மனுதாரரின் பட்டியலில் கண்டபடி 17 ¼ பவுன் சீர்வரிசை நகைகள் மட்டும் இவ்வுத்தரவு தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் எதிர்மனுதாரர் மனுதாரர் வசம் திருப்பி கொடுக்கவேண்டியது என் பிரிவு 19(8)ன்கீழ் உத்தரவிடப்படுகிறது.

4) **இழப்பீடு உத்தரவு :** குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ரூபாய் ஒரு இலட்சம் இழப்பீட்டை இந்த உத்தரவு தேதியிலிருந்து 2 மாதங்களுக்குள் வழங்க வேண்டியது.

உத்தரவு நகல் மனுதாரருக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் தேதி செவ்வாய்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

(ஒம்/- S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
(நீதித்துறை நடுவர் நிலை),
திருவாரூர்.

**மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

| **வ.எண்.** | **சாட்சிகள்** | **சாட்சிகள் விசாரித்த நாட்கள்** | **சாட்சிகளின் பெயர்கள்** |
|---|---|---|---|
| 1. | ம.சா.1 | 12.02.2026 | கவிவாணி |

**மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| **வ. எண்.** | **சான்றாவணங்களின் எண்ணிக்கை** | **நாள்** | **சான்றாவணங்கள்** |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 29.08.2023 | திருமண பத்திரிக்கை (பிரதி நகல்) |
| 2. | ம.சா.ஆ.2 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (நகல்) |
| 3. | ம.சா.ஆ.3 | -- | திருமண பதிவு சான்று (நகல்) |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் -இல்லை</u>**

- இல்லை -

(ஒம்/- S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
(நீதித்துறை நடுவர் நிலை),
திருவாரூர்.